# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600-032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்.143/2019/பே.1**
**ஆணை நாள்: 28 -02-2020.**

07.09.2019 நாளிட்ட "தினகரன் " நாளிதழ் செய்தி. -- இம்முறைமன்ற நடுவம் தாமாக முன்வந்து வழக்காக பதிவு செய்தது

செயல் அலுவலர்,
பள்ளிப்பட்டு பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம். –– எதிர் மனுதாரர்.

**ஆணை.**

07.09.2019 நாளிட்ட "தினகரன்" நாளிதழில் "பள்ளிப்பட்டு பேரூராட்சியில் குத்தகை பெறாமல் வரி வசூல் " என்ற தலைப்பிட்டு வரப்பெற்ற செய்தியினை, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7(i) ன்படி தாமாக முன் வந்து வழக்காக பதிவு செய்து, முறையீட்டு மனு எண். 143/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, உரியவாறு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

07.09.2019 நாளிட்ட தினகரன் நாளிதழ் செய்தியில், திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சியில் ஏலத் தொகை பேரூராட்சிக்கு செலுத்தாமல், தினசரி மார்க்கெட் வரி வசூல் செய்துவரும் குத்தகைதாரர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது

இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையின்படி வரப்பெற்ற பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலரின் 24.09.2019 நாளிட்ட அறிக்கையில், தினசரி சந்தை வசூல் தொடர்பாக 2018–19 முதல் 2020–21 வரை மூன்றாண்டு காலத்திற்கான குத்தகை பொது ஏலம், 28.02.2018 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஏல விளம்பரம் செய்யப்பட்டு, 06.03.2018 அன்று 11.00 மணிக்கு பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்றதாகவும், ஏல நிபந்தனைகளின்படி ஏலத் தொகையினை உரிய காலத்தில் செலுத்தாத காரணத்தினால் ஏலம் ரத்து செய்யப்பட்டதாகவும், இதனை எதிர்த்து குத்தகைதாரர்களால் வழக்கு தொடரப்பட்டு, 20.04.2018 நாளிட்ட மாண்பமை சென்னை உயர் நீதி மன்ற தடையாணையின்படி தினசரி சந்தை வசூல், குத்தகைதாரர்களால் மேற்கொள்ளப்பட்டதாகவும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற 06.07.2018 நாளிட்ட தீர்ப்பினையடுத்து 27.07.2018 நாளிட்ட பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் மூலம் குத்தகைதாரரால் வசூலிக்கப்பட்டு வரும் தினசரி சந்தை வசூலினை நிறுத்த ஆணையிடப்பட்டதாகவும், அதன் தொடர்ச்சியாக குத்தகைதாரரால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டதின் அடிப்படையில், 2018–19–ஆம் ஆண்டு முழுவதும்

செயல் அலுவலர்
குத்தகைதாரரால் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டதாக தனது அறிக்கையில்
தெரிவித்துள்ளார். ஏல நிபந்தனைகளுக்குட்பட்டு 2019–20ம் ஆண்டுக்கான குத்தகை தொகையினை
(2018–19 ஆம் ஆண்டு குத்தகைதாரரால் கேட்கப்பட்ட ஏலத் தொகையினை விட 5 விழுக்காடு கூடுதல்)
செலுத்த 04.09.2019 நாளிட்ட அறிவிப்பு மூலம் சம்பந்தப்பட்ட ஏலதாரர்களை கோரப்பட்டதில், தினசரி
சந்தை ஏலதாரர் தவிர ஏனைய நபர்கள் தொகையினை செலுத்தியதாகவும், தினசரி சந்தை ஏலதாரர்
மட்டும் தொகை செலுத்தாமல் வசூல் பணி மேற்கொண்டதால் மேற்படி குத்தகை உரிமம் ரத்து
செய்யப்பட்டு, தினசரி சந்தை காய்கறி மார்க்கெட் சுங்க வசூல் பணி துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு
வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

27.01.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலர்
தனது வாக்குமூலத்தில் 24.09.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விவரங்களையே தெரிவித்து,
பள்ளிப்பட்டு பேரூராட்சியில் மேற்படி ஏலம் விடப்பட்ட காலத்தில் திருமதி. மாலா என்பவர் செயல்
அலுவலராக இருந்ததாகவும், அவரைத் தொடர்ந்து திரு.ஜானகிராமன் என்பவர் செயல் அலுவலராக
பணிபுரிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

03.02.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான பள்ளிப்பட்டு பேரூராட்சி முன்னாள் செயல்
அலுவலர் திருமதி.மாலா தனது வாக்குமூலத்தில், தான் பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலராக
பணியில் இருந்த போது 06.03.2018 அன்று பள்ளிப்பட்டு பேரூராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வசூல்
ஆண்டிற்கு ரூ. 7,21,000/–, தினசரி மார்க்கெட் மற்றும் காய்கறி சந்தை வசூல் ஆண்டிற்கு ரூ.5,70,000/–,
பேருந்து நிலைய சுங்க வரி வசூல் ஆண்டிற்கு ரூ. 3,75,000/– மற்றும் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம்
ஆண்டுக்கு ரூ. 71,500/–க்கு ஏலம் விடப்பட்டதாகவும், முறையே திரு.கே.வினோத், திரு.கே.கௌதம்,
திரு.எஸ்.பி.சையது ஜாபர் மற்றும் திரு.பி.ரமேஷ் ஆகியோர் ஏலம் எடுத்ததாகவும், தனது பணிக்காலத்தில்
மேற்கண்ட தொகைகள் முழுமையாக வசூலிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். 2018–19 வரை
ஏலத்திற்கான முழுத் தொகையும் தன்னால் வசூலிக்கப்பட்டு விட்டதாகவும் தனது வாக்குமூலத்தில்
தெரிவித்துள்ளார்.

03.02.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான பள்ளிப்பட்டு பேரூராட்சி முன்னாள்
செயல் அலுவலர் திரு.பா.ஜானகிராமன் தான் பேரூராட்சி மூலம் ஏலம் விடப்பட்ட காலத்தில்
இப்பேரூராட்சியில் பணியில் இல்லை எனத் தெரிவித்துள்ளார். அன்றைய தினம் இம்முறைமன்ற
நடுவத்தில் ஆஜரான பள்ளிப்பட்டு பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திரு.ச.கலாதரன் தனது
வாக்குமூலத்தில் பள்ளிப்பட்டு பேரூராட்சி தினசரி சந்தைக்கான சுங்க வரி வசூல் பேரூராட்சி மூலம்
நடைபெற்று வருவதாகவும், தினசரி சராசரியாக ரூ.700/– வீதம் வசூலிக்கப்பட்டு வருவதாகவும்,
திருமதி மாலா, முன்னாள் பேரூராட்சி செயல் அலுவலர் மூலம் ஏலம் விடப்பட்ட இனங்களுக்கான முழுத்
தொகையும் வசூலிக்கப்பட்டு விட்டதாகவும், தற்போதைய தினசரி சந்தை சுங்க வரி வசூல் பேரூராட்சி
மூலம் நடைபெற்று வருவதாகவும், இதில் தனியார் யாரும் ஈடுபடுத்தப்படவில்லை எனவும் உறுதிபடத்
தெரிவித்துள்ளார். தினசரி சந்தை ஏலம் எடுத்த திரு. கௌதம் என்பவர் மட்டும் 2019–20–ஆம்
ஆண்டுக்கான உயர்த்தி அனுமதிக்கப்பட்ட ஏலத் தொகையினை செலுத்தவில்லை எனவும் இது
தொடர்பான அறிக்கையினை அலுவலக ஆவணங்களை சரிபார்த்து சமர்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில்
தெரிவித்துள்ளார்.

10.02.2020 நாளிட்ட பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலரின் (மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது)
கடிதத்தில் பள்ளிப்பட்டு பேரூராட்சிக்குட்பட்ட வார சந்தை, பேருந்து நிலைய சுங்க வரி வசூல், பேருந்து
நிலைய கட்டண கழிப்பிடம், மற்றும் தினசரி மார்க்கெட் மற்றும் காய்கறி சந்தை ஆகியன 06.03.2018 அன்று
பள்ளிப்பட்டு பேரூராட்சி மூலம் 2018–19 முதல் 2020–2021 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு ஏலம்
விடப்பட்டதாகவும், இதில் வாரச்சந்தை சுங்க வசூல் ஏலத்தினை அதிகத் தொகைக்கு திரு. ஜெ.வினோத்
என்பவரால் ரூ.7,21,000/– ஏலம் எடுக்கப்பட்டு ஏலத் தொகை 06.03.2018ல் செலுத்தியதாகவும்,
2019–20ஆம் ஆண்டுக்கு அவரால் எடுக்கப்பட்ட ஏலத் தொகையில் 5 விழுக்காடு உயர்வு அளித்து
ரூ.7,57,050/– ஐ 04.07.2019ல் செலுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்து நிலைய சுங்க வசூல் தொடர்பான ஏலத்தில் அதிகத் தொகை ரூ.3,75,000/– க்கு ஏலம்
எடுத்த திரு.எஸ்.பி.சையது ஜாபர் என்பவருக்கு ஏலம் வழங்கப்பட்டு, ஏலத் தொகை 06.03.2018ல்

செலுத்தியதாகவும், 2019–20 ம் ஆண்டுக்கு ஏற்கனவே ஏலம் எடுத்த தொகையில் 5 விழுக்காடு உயர்வு அளித்து ரூ.3,93,750/–ஐ, 04.07.2019ல் சம்பந்தப்பட்டவரால் சலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் ஏலம் விடப்பட்டதில் அதிகத் தொகை ரூ.71,500/–க்கு ஏலம் எடுத்த திரு.பி.ரமேஷ் என்பவருக்கு ஏலம் வழங்கப்பட்டு, ஏலத் தொகையினை சம்பந்தப்பட்ட நபரால் 06.03.2018ல் செலுத்தப்பட்டதாகவும், 2019–20ஆம் ஆண்டுக்கு ஏற்கனவே ஏலம் எடுத்த தொகையில் 5 விழுக்காடு உயர்வு அளித்து ரூ. 75,075/– சம்பந்தப்பட்ட நபரால் 13.05.2019ல் செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினசரி மார்க்கெட் மற்றும் காய்கறிச் சந்தை சுங்க வசூல் ஏலம் விடப்பட்டதில் அதிகத் தொகை ரூ. 5,70,000/–க்கு ஏலம் எடுத்த திரு.கே.கௌதம் 2018–19ஆம் ஆண்டுக்கான ஏலத் தொகையினை 07.03.2018ல் செலுத்தியதாகவும், 2019–20க்கு மேற்படி ஏலத் தொகையில் 5 விழுக்காடு உயர்வுத் தொகை ரூ.5,98,500/–ஐ சம்பந்தப்பட்ட நபர் செலுத்தாத காரணத்தினால், பள்ளிப்பட்டு பேரூராட்சி மூலம் 04.09.2019ல் அறிவிப்பு வழங்கப்பட்டும் தொகை செலுத்தாத நிலையில், பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலரின் 24.09.2019 நாளிட்ட செயல் முறையில் ஏலம் ரத்து செய்யப்பட்டு, தினசரி மார்க்கெட் மற்றும் காய்கறி சந்தை சுங்க வசூல் பேரூராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள் மற்றும் முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்களின் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டன. பள்ளிப்பட்டு பேரூராட்சி மூலம் 06.03.208 அன்று 2018–2019 முதல் 2020–2021 வரையிலான காலத்திற்கு ஏலம் விடப்பட்ட வாரச்சந்தை , பேருந்து நிலைய சுங்க வசூல், பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் மற்றும் தினசரி மார்க்கெட் மற்றும் காய்கறி சந்தைக்கான ஏலத் தொகைகள் 2018–2019ஆம் ஆண்டுக்கு முழுமையாக வசூலிக்கப்பட்டு, 2019–20ஆம் ஆண்டிற்கு தினசரி மார்க்கெட் மற்றும் காய்கறி சந்தைக்கான ஏலம் தவிர, இதர இனங்களுக்கான தொகைகள் முழுமையாக வசூலிக்கப்பட்டுள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. தினசரி மார்க்கெட் மற்றும் காய்கறி சந்தைக்கான 2018–19ஆம் ஆண்டு ஏலத் தொகையில் 5 விழுக்காடு உயர்த்தி ரூ.5,98,500/– ஐ செலுத்த சம்பந்தப்பட்ட குத்தகைதாருக்கு 04.09.2019ல் செயல் அலுவலரால் அறிவிப்பு வழங்கப்பட்டும், தொகை செலுத்தாத நிலையில், தினசரி மார்க்கெட் மற்றும் காய்கறி சந்தைக்கான ஏலம் 24.09.2019 நாளிட்ட செயல் முறை மூலம் ரத்து செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், சம்பந்தப்பட்ட நபரால் 01.04.2019 முதல் ஏலம் ரத்து செய்யப்பட்ட நாளான 24.09.2019 வரை தினசரி மார்க்கெட் காய்கறி சந்தை சுங்க வசூல் தொகையாக ரூ.2,99,250/– வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், அதனை வட்டித் தொகையுடன் செலுத்தவும் பள்ளிப்பட்டு பேரூராட்சி செயல் அலுவலரது 24.09.2019 நாளிட்ட செயல்முறைகளில் ஆணையிடப்பட்டுள்ளது. தற்போது தினசரி மார்க்கெட் மற்றும் காய்கறி சந்தை சுங்க வசூல் பேரூராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்நேர்வில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைவாக முடிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை பதிவு செய்யப்பட்டு இந்நேர்வில் தொடர் நடவடிக்கையினை கைவிட முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 28 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

சென்னை–600 032

28-2-20

செயலாளர்.

28.2.2020

பெறுநர்

1.செயல் அலுவலர்,
பள்ளிப்பட்டு பேரூராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்.

2.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–28.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருவள்ளூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருவள்ளூர்

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)